
# புதியவற்றை அறிந்து கொள்ளாவிடில் தோல்வி அடைந்து விடுவோம்




▶ புதுச்சேரி பல்கலைக்கழக புவிசார் அறிவியல் துறை சார்பில் நடந்த கருத்தரங்கில் கவர்னர் தமிழிசை பேசினார். அருகில் துணைவேந்தர் குர்மீத் சிங்.

## கவர்னர் தமிழிசை பேச்சு

காலாப்பட்டு, அக். 18: மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உதவியோடு புதுச்சேரி பல்கலைக்கழக புவிசார் அறிவியல் துறை மற்றும் மகாராஷ்டிரா கோலாப்பூர் சிவாஜி பல்கலைக்கழகம் சார்பில் ஒருங்கிணைந்த பயிற்சி திட்டத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பின் பயன்பாடு குறித்த கருத்தரங்கம் நேற்று நடந்தது. பேராசிரியர் சிவசங்கர் வரவேற்றார். துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார்.

இக்கருத்தரங்கை கவர்னர் தமிழிசை தொடங்கி வைத்து பேசியதாவது:

நம்முடைய திறன்களை மேம்படுத்திக் கொள்வது நம்முடைய வளர்ச்சிக்கு உதவும். அதனால் சவால்களை எதிர்கொள்ள முடியும். தொடர் ஆராய்ச்சிகள் செய்வதன் மூலமாக நாம் நம்மை தயார் படுத்திக் கொள்கிறோம். பிரதமரின் ஆத்மநிர்பர் பாரத், சுயசார்பு இந்தியா போன்ற தொலைநோக்கு திட்டங்கள் மூலமாகவும் தொடர் முயற்சியின் மூலமாகவும் தான் கொரோனா பெருந்தொற்று காலத்தில் சவால்களை எதிர்கொள்ள முடிந்தது. தொடர் ஆராய்ச்சிகளால் நம்முடைய நாடு முன்னேறி கொண்டிருக்கிறது. திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும்போது, பிரதமர் கூறியதை போல நம்முடைய இளைய தலைமுறையை வகுப்பறைகளில் இருந்து உலக அரங்கத்திற்கு அழைத்து செல்ல முடியும்.

அரசு பல்வேறு திட்டங்களை, வாய்ப்புகளை அளிக்கிறது. அதை மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். அரசு வழங்கும் ஒருங்கிணைந்த பயிற்சி திட்டம் போன்றவற்றையும் பயன்படுத்தி கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் உலகம் வேகமாக முன்னேறி கொண்டிருக்கிறது. புதியவற்றை நாம் அறிந்து கொள்ளாவிட்டால் தோல்வி அடைந்து விடுவோம். இளைஞர்களை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் அவர் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்காக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சரை பாராட்டுகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

இதில் சிவாஜி பல்கலைக்கழக பேராசிரியர் சொங்காவதே மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். வேதியியல் துறை தலைவர் பால மணிமாறன் நன்றி கூறினார்.

www.dinamalar.com
புதுச்சேரி
• செவ்வாய் • அக்டோபர் 18 2022




■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் புவிசார் அறிவியல் துறை சார்பில் ஒருங்கிணைந்த பயிற்சி பட்டறையை கவர்னர் தமிழிசை துவக்கி வைத்து பேசினார்.


# பயிற்சி பட்டறை

**புதுச்சேரி, அக். 18–** அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்தி ஒருங்கிணைந்த பயிற்சி பட்டறை, புதுச்சேரி பல்கலைக்கழகம், மத்திய கருவியியல் மையத்தில் நடைபெற்றது.

இந்த பயிற்சி பட்டறையை கவர்னர் தமிழிசை தலைமை தாங்கி, துவக்கி வைத்தார். மையத்தின் தலைவர் சிவசங்கர் வரவேற்றார். துணை வேந்தர் குர்மீத்சிங் முன்னிலை வகித்தார்.

சிவாஜி பல்கலைக்கழக பேராசிரியர் சொன் கேவாடே சிறப்புரை ஆற்றினார். முன்னாள் மைய தலைவர் மணிமாறன் நன்றி கூறினார்.

# புதுவை பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப கருத்தரங்கு



புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் திங்கள்கிழமை கருத்தரங்கை தொடக்கிவைத்து பேசுகிறார் துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன்.

**புதுச்சேரி, அக்.17:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைந்த பயிற்சி திட்ட அறிவியல், தொழில்நுட்ப உள்கட்டமைப்பின் பயன்பாடு குறித்த கருத்தரங்கு திங்கள்கிழமை நடைபெற்றது.

புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன் கருத்தரங்கைத் தொடக்கிவைத்துப் பேசினார்.

புதுவை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மித் சிங் தலைமை வகித்தார்.

கோலாப்பூர் சிவாஜி பல்கலைக்கழக பேராசிரியர் ஆர்.ஜி.சொங்கவாதே கருத்தரங்கின் நோக்கம் குறித்து பேசினார். பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

புவிசார் அறிவியல் துறை தலைவர் சிவசங்கர் வரவேற்றார். பாலமணிமாறன் நன்றி கூறினார்.

# CII's talent, employability and entrepreneurship building programme for students

**The Hindu Bureau**
PUDUCHERRY

The Confederation of Indian Industry (CII), Puducherry, has concluded a six-week talent, employability and entrepreneurship building programme for rural and underprivileged students.

The fourth edition of the 'Garnishing Talent Programme', a CII partnership with Eaton Power Quality Ltd, which was returning after a pandemic-induced gap of three years, focused on students from vernacular medium (English/Tamil medium) and rural background whose families were not economically well off, a press note said.

The programme, included sessions on personal development, essential workplace skills, assessment and selection, business processes, emerging business trends and entrepreneurship.

The students were trained by experienced facilitators from Eaton and the industry. Sessions were specially curated and customised to help the participants gain an insight into the expectations of the industry, qualities that they need to develop, current industry trends and scope of entrepreneurship, CII said.



Gurmeet Singh, V-C of Pondicherry University, addressing the valedictory of a student empowerment programme co-hosted by CII.

The key objectives were improving employability among college students and making them industry ready. The target group comprised about 130 students from seven educational institutions and vernacular medium of education, with rural background and economically/socially backward setting.

In his valedictory address, Gurmeet Singh, Vice-Chancellor, Pondicherry University, exhorted the students to explore all available opportunities to become successful business professionals and entrepreneurs and contribute in the nation building process.

The Vice-Chancellor also appreciated the role played by the industries during the pandemic and how their involvement played a huge part in mitigating the impact of COVID-19. Syed Sajjadh Ali, Managing Director, Eaton Power Quality Limited, S. Sureender, chairman, and A Joseph Razario, vice-chairman, CII Puducherry, and Anthony Jayakumar, from Eaton also participated.